# திருக்குறளில் இசை பற்றிய செய்திகள்

திருமதி கிருபாசக்தி கருணா
சிரேஷ் விரிவுரையாளர், இசைத்துறை
யாழ் பல்கலைக்கழகம், இலங்கை

திருக்குறள் முக்காலத்திற்கும், எந்நாட்டவர்க்கும் எம்மதத்தவர்க்கும் ஏற்ற வகையில் பரந்துபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ள அறிவுச் சுரங்கமாகும். பழந்தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் இசையை 'ஏழிசை' என்று சிறப்பித்திருந்தாலும் திருக்குறளில் ஏழிசை என்று கூறப்படவில்லை. ஆனால் வள்ளுவர் குழல், யாழ், பறை ஆகிய இசைக்கருவிகளை முதன்மைப்படுத்தித் தன்நூலில் கூறியுள்ளமை சிறப்புடையது. இசைநிலையில் குழலும் யாழும் இனியது என்று குறிப்பிட்டுள்ள வள்ளுவர், குழலின் பின் யாழை வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பழந்தமிழ் மன்னர்களின் அவைக்களங்களில் பெருமைக்குரிய கருவியாகத் திகழ்ந்த யாழ் இசைக்கருவியை, திருவள்ளுவரும் "குழலினிது யாழ் இனிது" எனச் சிறப்பித்துள்ளார். திருக்குறளில் வில்லைப் போன்ற வளைவான யாழ் இருந்தது எனக் குறிப்பிடுகின்றார். இன்னும் மனிதன் தோன்றிய காலம் முதல் இன்று வரை பயன்பாட்டில் உள்ள சிறப்புடைய பறை மற்றும் பண், பாடல் பற்றிய குறிப்புகளும் காணப்படுகிறது. இந்தவகையில் வள்ளுவர் இசையைப் பற்றிய கருத்துகளையும் இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகளையும் கூறியுள்ளமை இக்கட்டுரை மூலம் ஆராயப்படுகிறது.